
## மனிதனுடைய வீழ்ச்சியின் பொருளும், கீழ்ப்படியாமையின் விளைவுகளும் - 03

**வேத வாசிப்பு** : *மத். 3:7; 7:13-14; 25:46; யோவான் 3:16, 36, 14:6; அப். 1:8; 15:14; ரோமர் 3:23; 5:8; 6:23; 1 கொரி. 2:2; 6:6; 2 கொரி. 5:20; எபே. 1:6; 2:1-5, 12; 4:18; கொலோ. 1:13, 21; 1 தெச. 4:13; 2 தெச. 1:9; எபி. 1:3; 2:10; 1 யோவான் 5:19; எரே. 17:9*




தேவனுடைய அற்புதமான மீட்பின் வேலையைப் பார்ப்பதற்குமுன், மனிதனுடைய *வீழ்ச்சியினால் ஏற்பட்ட விளைவுகளையும்*, தேவன் அவைகளைச் சரிசெய்து அவனை *இரட்சிப்பதில் உள்ள பிரச்சினைகளையும்* நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

**1. வீழ்ச்சியின் விளைவு**

மனிதன் எப்படிப்பட்டவனாக மாறியிருக்க முடியும், ஆனால் உண்மையில் அவன் எப்படிப்பட்டவனாக மாறினான் என்று முதல் வரைபடத்தில் பார்க்கிறோம்.

- அவன் "*நித்திய ஜீவனைப்*" பெற்று, தேவன் தன்னைப் படைத்ததின் உயர்ந்த நோக்கத்தை எய்திருக்க முடியும். ஆனால், அவன் இவைகளையெல்லாம் இழந்தான்; ஜீவ-மரத்திற்குப் போகும் வழி அடைக்கப்பட்டது;
- அது மட்டுமல்ல, அவன் ஒழுங்கற்றவனாக, குழம்பிப்போய் திக்குத்தெரியாமல் தடவித்திரிகிற வனாக மாறிவிட்டான்;
- அவன் தன் ஆவியில் தனக்குள் "*தேவனுடைய ஜீவனால்*" கட்டுப்படுத்தப்படுவதையும், அது அவனுக்குள் பெருகிக்கொண்டேபோவதையும் எய்திருக்க முடியும். ஆனால், அதற்குப்பதிலாக, அவன் ஆவிக்குரியவிதத்தில் மரித்துப்போனான்; தேவனுடைய ஜீவனுக்கு அந்நியனாகிவிட்டான்;

- *அவன் தேவனுடைய நண்பனாகி இருக்கலாம்; ஆனால் அதற்குப்பதிலாக அவன் அவருடைய எதிரியாகிவிட்டான்;*
- *தன் வாழ்க்கையை அவன் தன் கையில் எடுத்துக்கொண்டான். அதாவது அவன் வாழ்க்கைக்கு அவனே 'ராஜாவாக' மாறிவிட்டான். தேவனுடைய அரசாங்கத்தின்கீழ் வாழ்வதற்குப்பதிலாக அவன் சுயாட்சியைத் தேர்ந்தெடுத்தான். அவனுடைய எண்ணங்களும், உணர்ச்சிகளும், அபிப்பிராயங்களும், சுய-விருப்பமுமே அவனை ஆளத்தொடங்கின. ஆட்சியை அவனுடைய "சுயம்" தன் கையில் எடுத்துக் கொண்டது. மனச்சாட்சிபோன்ற அவனுடைய ஆவிக்குரிய புலன்கள் சிறைக்கைதிகளாகிவிட்டன என்று சொல்லலாம்.*
- *அவன் இப்போது தேவன் விரும்பியதுபோல் செயல்படவில்லை. இசைவுக்குப்பதிலாக முரண்பாடும், "பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணமும்" இப்போது அவனுக்குள் செயல்பட ஆரம்பித்தன.*
- *இந்த நிலைமையில் அவன் உளவியல் மருத்துவரைப் பார்க்க வேண்டிய நோயாளியாக மாறி யிருந்தான். ஆனால், மனோவியல் மருத்துவத்தால் உண்மையான தீர்வுகளைக் கொடுக்க முடியாது. அதிகபட்சம் அவனுடைய பிரச்சினையை, அப்போதைக்குக் குறைக்கிற மருந்துகளையோ, ஆலோ சனைகளையோ அல்லது இடைக்கால நிவாரணத்தையோதான் அவர்களால் கொடுக்க முடியும். சில சமயங்களில், அவர்கள் கொடுக்கிற தீர்வுகள் பொய்யான தீர்வுகளாகவும் இருக்க முடியும். கிறிஸ்து வின் நற்செய்தி மட்டுமே உண்மையான பதில்களையும், தீர்வுகளையும் தரும்.*

**புறக்கணிக்கப்பட்ட இனம்**

*ஆதாமின் வீழ்ச்சியின் விளைவாக, மனித இனம் தேவனால் புறக்கணிக்கப்பட்ட இனமாக மாறிவிட்டது என்று இரண்டாவது வரைபடத்தில் பார்க்கிறோம். நாம் அந்த இனத்தைச் சார்ந்தவர்கள். நாம் தேவ னால்* ***புறக்கணிக்கப்பட்டவர்கள்;*** *இருப்பினும்* ***தேவன் நம்மில் அன்புகூருகிறார்.*** *நாம் சீரழிந்துபோயிருந்தாலும், அவரால் படைக்கப்பட்டவர்கள் என்பதாலும், நாம் எப்பேர்ப்பட்டவர்களாக மாற முடியும் என்பதாலும் அவர் நம்மை நேசிக்கிறார். நாம் புறக்கணிக்கப்பட்டவர்கள்; இருந்தபோதும் தேவன் நம்மை இன்னும் கைவிடவில்லை. நாம் ஏதேன் தோட்டத்திலிருந்து விரட்டப்பட்டவர்கள்; ஜீவ மரத்தில் பங்குபெறாதபடி நமக்கு வழி அடைக்கப்பட்டது; அது நமக்குத் தடைசெய்யப்பட்டது; இருப்பி னும், நமக்கு ஒரு மீட்பர் வருவார் என்ற வாக்குறுதி கொடுக்கப்பட்டது. பாவத்தினாலும், மரணத்தி னாலும் சிதைந்து சின்னாபின்னமாகிப்போனதாலும், தேவனுடைய நோக்கம் நிறைவேறுவதற்குத் தகுதி யில்லாத, பயனற்ற, பாழடைந்த, சீரழிந்த இனமாக மாறிவிட்டதால், தேவனால் புறக்கணிக்கப்பட்ட இனமாக இருந்தபோதும், நாம் தேவனுடைய மிகுந்த அன்புக்குரியவர்கள்.*

**தேவனுடைய அன்பு**

*அந்த அன்பு நம் அன்பிலிருந்து மிக வேறுபட்டது! அது பரிசுத்தமான, மலிவான உணர்ச்சிகளின் அடிப்படையிலான அன்பல்ல! அது நம் மிக உயர்ந்த நன்மையைக்குறித்த கரிசனையும், அக்கறையும் கொண்ட அன்பு! அது ஆக்கினைத்தீர்ப்பிலிருந்தும், பேரழிவிலிருந்தும் தப்பித்துக்கொள்வதற்கான வழியை ஏற்படுத்துகிற அன்பு!*

**கலகக்காரர்கள், குற்றவாளிகள், நோயாளிகள்**

*வீழ்ச்சியின் விளைவால் ஏற்பட்ட நம்முடைய பரிதாபமான நிலையை இரண்டாவது வரைபடம் விளக்கு கிறது. தேவனுடைய* ***சட்டத்தை மீறியவர்கள்*** *என்பதாலும்,* ***கலகக்காரர்கள்*** *என்பதாலும் நாம் குற்ற வாளிகள், ஆக்கினைத்தீர்ப்புக்கு ஏதுவானவர்கள். இன்றைய காலகட்டத்தில் மக்கள் பாவத்தை பாவ மாகக் கருதவில்லை; நியாயத்தீர்ப்பையும், நரகத்தையும் அவர்கள் நம்பவில்லை. பாவத்தை பாவமாகக் கருதாத, நியாயத்தீர்ப்பையும், நரகத்தையும் நம்பாத மதத் தலைவர்களும் இருக்கிறார்கள். இப்படிப் பட்ட நாட்களில், வரப்போகிற பயங்கரமான ஆபத்தாகிய "நித்திய ஆக்கினை"யைக்குறித்தும், "வரப்போகிற கோபாக்கினை"யைக்குறித்தும் மற்ற யாரையும்விட ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே அதிகமாக எச்சரித்தார் என்பதை நினைவில்கொள்வது நல்லது. தேவன் தம் அன்பின் காரணமாக, நாம்*

தப்பித்துக்கொள்வதற்கான ஒரு வழியை நமக்கு ஏற்படுத்தியிருக்கிறார். மனிதர்கள் என்ன சொன்னா லும் சரி, இந்த மனித இனம் இன்று அவருடைய பரிசுத்த கோபத்தின் நிழலில் இருக்கிறது.

**சாத்தானின் கூட்டாளிகள், கைதிகள்**

மேலும், நாம் **சாத்தானுடைய கூட்டாளிகளாகவும், கைதிகளாகவும்** இருக்கிறோம்; நாம் அவனுடைய கைப்பாவைகளாக மாறி, அவனுடைய விருப்பத்தைத்தான் செய்துகொண்டிருக்கிறோம். ஏனென்றால், நாம் நம் மனம்போல வாழ வேண்டும் என்று தீர்மானித்தபோது உண்மையில் நாம் சாத்தானுடைய விருப்பப்படி வாழ்வதையே தெரிந்தெடுத்தோம். பாவம், சுயநலம் என்ற குணப்படுத்தமுடியாத புற்று நோயினால் நாம் பாதிக்கப்பட்டிருக்கிறோம். **பாவம் என்ற விஷம்** நம் இரத்தத்தில், மனித உடலில், கலந்திருக்கிறது. அது நம் நாடிநரம்புகளில் இருக்கிறது. **ஆவிக்குரியவிதத்தில் நாம் 'மரித்தவர்கள்,'** அதாவது ஜீவனுள்ள தேவனைவிட்டு நாம் பிரிந்திருக்கிறோம். தேவன் நம்மைப் படைத்த நோக்கத்தை விட்டு நாம் விலகிச்சென்றுவிட்டோம்; எனவே, நாம் நம்பிக்கையற்றவர்களும், நியாயத்தீர்ப்பைத்தவிர எந்த எதிர்காலமுமற்றவர்களும், வாழ்க்கையில் உண்மையான நோக்கமற்றவர்களும் இந்தப் பூமியில் இருப்பதற்கு எந்தக் காரணமுமற்றவர்களாக இருக்கிறோம். ஏனென்றால், விழுந்துபோன மனிதனின் வாழ்க்கைக்கு எந்தப் பொருளும் இல்லை.

**1. நம் தேவைகள்--மன்னிப்பு, விடுதலை, சுகம், சுத்திகரிப்பு, ஜீவன், ஏற்பு**

எனவே, **'கலகக்காரர்கள்'** என்ற முறையில் நமக்கு **மன்னிப்புத் தேவை;** தேவனோடு நாம் ஒப்புர வாக்கப்பட வேண்டும்; ஏனென்றால், நாம் அவருக்கு எதிராகப் பாவம் செய்திருக்கிறோம். **'கைதிகள்'** என்ற முறையில், சாத்தானின் பிடியிலிருந்து நமக்கு **விடுதலை வேண்டும்.** குணப்படுத்த முடியாத **'நோயாளிகள்'** என்ற முறையில் நமக்கு **மீட்பும், சுகமும் தேவை.** *"அவருடைய மகிமையின் பிரகாசத்தால்'* மட்டுமே நமக்குள் இருக்கும் பாவப் புற்றுநோய்க் கிருமிகளைக் கொன்று அழிக்க முடியும். **'விஷம் நிறைந்தவர்கள்'** என்ற முறையில் நாம் கழுவப்பட்டு **சுத்தமாக்கப்பட வேண்டும்.** நமக்கு ஆவிக்குரிய இரத்தமாற்று சிகிச்சை தேவை, அதாவது நமக்குள் ஆவிக்குரிய இரத்தம் செலுத்தப்பட வேண்டும். **'மரித்தவர்கள்'** என்ற முறையில் நாம் **உயிர்ப்பிக்கப்பட வேண்டும்,** நமக்கு ஜீவன் வேண்டும். **'நம்பிக்கையற்றவர்கள்'** என்ற முறையில் நியாயத்தீர்ப்பிலிருந்து நமக்கு **விடுதலையும்,** அதைத் தொடர்ந்து இந்த வாழ்க்கைக்கும் வரப்போகிற வாழ்க்கைக்கும் **நோக்கமும், அர்த்தமும் வேண்டும்.** 'புறக்கணிக்கப்பட்டவர்கள்', 'சிதைக்கப்பட்டவர்கள்,' 'அழிக்கப்பட்டவர்கள்,' 'பயனற்றவர்கள்' என்ற முறையில் தேவன் நம்மை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிலும், கிறிஸ்துவின்மூலமாகவும் இது இப்போது சாத்தியமே. இவைகளெல்லாம் தேவனுடைய மாபெரும் இரட்சிப்பின் திட்டத்தில் நமக்கு வழங்கப்பட்டுள்ளன. ஒன்றைக் கவனியுங்கள். நாம் இவைகளை அனுபவிக்க வேண்டுமானால் தீவிரமான நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டும்.

"நம்மை நாம் கொஞ்சம் சீர்படுத்திக்கொண்டால் போதும் அல்லது இப்போது இருப்பதைவிட இன்னும் கொஞ்சம் சிறப்பாக வாழ நமக்கு ஓர் உதவிக்கரம் கிடைத்தால் போதும்," என்பது முற்றிலும் தவ றாகும். உலகத்திலுள்ள எல்லாருக்கும் தேவன் பிதா என்றும், உலகத்திலுள்ள எல்லாரும் சகோதரர்கள் என்றும் சொல்லி கிறிஸ்தவத்தை நீர்த்துப்போகச் செய்துவிட்டார்கள். இன்னொரு சாரார், "தேவன் அன்பாகவே இருக்கிறார். எனவே, கடைசியில் அவர் தம் அன்பினிமித்தம் எல்லாரையும் மன்னித்துத் தம்மிடம் சேர்த்துக்கொள்வார் அல்லது இந்தப் பூமியில் தம் அரசை நிறுவ வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தினால் கடைசி முயற்சியாக இப்படிச் செய்வார்," என்று தேவனுடைய வார்த்தையை ஏனோதானோவென்று எடுத்துக்கொள்கிறார்கள். இப்படி இவர்கள் ஒரு பொய்யான நற்செய்தியை அறி விக்கிறார்கள். படைத்தவர் என்ற முறையில் தேவன் எல்லாருக்கும் பிதா என்றும், படைக்கப்பட்டவர்கள் என்ற முறையில் நாமெல்லாரும் சகோதரர்கள் என்றும் ஒருவகையில் சொல்லலாம். ஆனால், மறுபடியும் பிறந்தவர்களுக்கு மட்டுமே அவர் பிதா என்றும், அப்படி மறுபடி பிறந்தவர்கள் மட்டுமே சகோதரர்கள் என்றும் புதிய ஏற்பாடு கூறுகிறது. எல்லாரும் பரலோகத்துக்குப் போகலாம்; ஆனால், தேவனுடைய நிபந்தனைகளின்படி அநேகர் பரலோகத்துக்குப் போக மாட்டார்கள் என்று புதிய ஏற்பாடு தீர்க்கமாகக் கூறுகிறது. தம் இரண்டாம் வருகையில் கிறிஸ்துதாமே தேவனுடைய அரசைப் பூமியில் நிறுவுவார் என்று பார்க்கிறோம். அவருடைய அரசைப் பூமியில் நிறுவுவதோ அல்லது இந்த உலகத்தை கிறிஸ்தவமாக்குவதோ இன்று சபைக்குக் கொடுக்கப்பட்ட கட்டளை அல்ல; அது நம் வேலை அல்ல.

அவருடைய வருகைக்குமுன் அவருடைய "*சாட்சிகளாகவும்*" "*தூதுவர்களாகவும்*" இருப்பதே சபையின் மெய்யான வேலையாகும். அப்போது தேவன் நற்செய்தியின்மூலம் தேசங்களிலிருந்து "தம்முடைய நாமத்திற்காக ஒரு கூட்டம் மக்களை," ஒரு புதிய இனத்தை, கூட்டிச்சேர்த்து, "*அநேக சகோதரர்களை மகிமைக்குள்*" கொண்டு வந்து சேர்ப்பார். உண்மையான சபை தேவனுடைய "மாற்றுச் சமுதாயம்." இது இந்த உலகத்தின் விழுந்துபோன சமுதாயத்திற்கு நேர் எதிராக நிற்க வேண்டும்.

ஏதோவொரு வகையில் அநேகர் தங்கள் நம்பிக்கையை "மதத்தின்மேல்" வைத்திருக்கிறார்கள். ஆனால், "மதம்" என்பது விழுந்துபோன மனிதனுடைய மதவுணர்ச்சிகளின் வெளியாக்கம் மட்டுமே. மதத்தால் மனிதனைக் காப்பாற்ற முடியாது. இந்த உலகத்தின் மதங்களோ, பொய்யான கிறிஸ்தவமோ நம்மைக் காப்பாற்றவோ, இரட்சிக்கவோ முடியாது. "எல்லா மதங்களும் உண்மையயில் ஒரே தேவனையே ஆராதிக்கின்றன என்பதும், அவைகளெல்லாம் அவரிடமும், 'பரலோகத்துக்குமே' நம்மை நடத்துகின்றன" என்ற பிரபலமான கருத்து முழுக்க முழுக்க பொய். மேலும், இரட்சிக்கப்படுவதற்காக எந்த வகையான "மதம்சார்ந்த அனுபவங்களின்மேல்" விசுவாசம் வைப்பது மிகவும் ஆபத்தானது. இயேசு ஒருவரே இரட்சிக்கிறார். கிறிஸ்து ஒருவரே ஒரே வழி. "*சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்துவே*" உண்மையான நற்செய்தியின் மையம்.

நம்மை மன்னிக்க ஆச்சரியமான கிருபை தேவை; நம்மை மீட்க வல்லமையுள்ள மீட்பர் தேவை; நம்மை சிகிச்சைசெய்து நம்மைக் குணமாக்க அற்புதமான சிகிச்சை நிபுணரும், மருத்துவரும் தேவை; பாவத்திலிருந்தும் மரணத்திலிருந்தும் நம்மை உயிர்ப்பித்து அளவற்ற நம்பிக்கை நிறைந்த எதிர்காலத்தைக் கொண்ட ஒரு புதிய வாழ்க்கைக்குக் கொண்டுவர அற்புதம் செய்கிற தேவன் தேவை. புதிய ஏற்பாட்டின் வெளிச்சத்தின்படி, மேலே சொன்ன பொய்யான கருத்துக்களை நம்புவது பேராபத்தை ஏற்படுத்தக்கூடிய தவறாகும். நம் ஆழமான தேவையையும், இரட்சிப்பில் உண்மையாகவே என்ன சம்பந்தப்பட்டிருக்கிறது என்பதையும் நாம் உணரவில்லையென்றால், தேவனுடைய அடித்தளத்தின்மேல் நாம் நம் வாழ்க்கையைக் கட்டியெழுப்புகிற காரியத்தில் வெகு தூரம் செல்லமாட்டோம்.